# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 26 புதன்கிழமை 10.09.2025 கதிர் 305







# மலையக அதிகார சபை மூடப்படாது!

## மனோ எம்.பியிடம் அநுர அரசு உறுதி



கொழும்பு, செப். 10

“மலையக அதிகார சபை என அறியப்படும் பெருந்தோட்ட பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையை மூடி விட மாட்டோம். அதைத் தொடர்ந்து முன்னெடுப்போம்.” - என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியிடம் நேரடியாக உறுதி அளித்துள்ளார்.

இது பற்றி மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

“மலையக அதிகார சபை என அறியப்படும் பெருந்தோட்ட பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையை மூடி விட மாட்டோம். அதைத் தொடர்ந்து முன்னெடுப்போம் என துறை சார் அமைச்சர் சமந்த வித்யாரத்ன, இன்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் என்னிடம் தனிப்பட்ட உறுதிமொழியை அளித்தார்.

கல்வி, காணி, வீடு, சுகாதாரம், சமூக மேம்பாடு, வருமான - வேதன தேவைபாடு, வறுமை ஒழிப்பு ஆகிய பல்வேறு துறைகளில் பின் தங்கியுள்ள மலையகப் பெருந்தோட்ட மக்கள் வளர்சி அடைய வேண்டுமானால், இந்த பல்வேறு துறை சார் அமைச்சுகளின் பணிகள் கூட்டி இணைக்க பட வேண்டும். இந்த

7

# மாகாண சபைத் தேர்தலை இயலுமானவரை விரைவில் நடத்துவதே அரசின் நோக்கம்

## ஜெனிவாவில் இந்தியா விடுத்த கோரிக்கைக்கு அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த இப்படி பதில்



கொழும்பு, செப். 10

“மாகாண சபைத் தேர்தலை இயலுமானவரை விரைவில் நடத்துவதே அரசின் எதிர்பார்ப்பாக உள்ளது.” - என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை இலங்கை அரசு நடத்த வேண்டும் என்று ஜெனிவாக் கூட்டத் தொடரில் இந்தியா முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதவாது:-

“குறித்தொகுக்கப்பட்ட காலத்தில் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் கால எல்லை பற்றி எனக்கு உறுதியாகக் கூற முடியாது. அதற்குரிய சட்டதிருத்தங்களை நிறைவேற்ற வேண்டியுள்ளது. எனினும், கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தல் நடத்தப்படும்.” - என்றார்.

அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டம் பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

“அந்தச் சட்டம் நிச்சயம் நீக்கப்படும். அதற்குரிய நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. நிகழ்நிலை காப்புச் சட்டமும் மறுசீரமைக்கப்படும்.” - என்றார் .

## மொரட்டுவை நகர சபையின் முன்னாள் தவிசாளர் மறியலில்

கொழும்பு, செப். 10

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் மொரட்டுவை நகர சபையின் முன்னாள் தவிசாளர் சமன் லால் பெர்னாண்டோ இன்று முற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை

7

## நிமலராஜன் படுகொலை வழக்கின் விசாரணை அறிக்கை விநியோகம்




வவுனியா, செப். 10


ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை வழக்கின் விசாரணை அறிக்கை வவுனியா ஊடகவியலாளர்களால் இன்று விநியோகிக்கப்பட்டது.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில்

7

## யாழில் விசித்திர விபத்து!



யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் மருதனார்மடம் சந்திப் பகுதியில் இன்று புதன்கிழமை ஒரு சைக்கிளும், 3 மோட்டார் சைக்கிள்களும் ஒன்றுடன் ஒன்று

7

## மருதமுனையில் கத்திக்குத்து! குடும்பஸ்தர் ஒருவர் மரணம்!!



மருதமுனை, செப். 10

அம்பாறை மாவட்டம், பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை 65 மீற்றர் வீட்டுத் திட்டப் பகுதியில் நேற்று இரவு இரு குடும்பஸ்தர்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு பின்னர் கத்திக்குத்தாக

7


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்து குழந்தை, மாணவன் உள்ளிட்ட நால்வர் பலி!

கொழும்பு, செப் .10

நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 11 மாத குழந்தை மற்றும் பாடசாலை மாணவர் உட்பட நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்து சம்பவம் பேராதனை, உடுகம, கடவத்தை, ராகம மற்றும் மாவதகம பொலிஸ் பிரிவுகளில் நேற்று (09) இடம்பெற்றுள்ளது.

கண்டி - குருநாகல் பிரதான வீதியில் 06வது மைல்கல் பகுதியில் வேன் ஒன்று வீதியை விட்டு விலகி பாதுகாப்பு வேலி மற்றும் மின்சார தூணில் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

ஏற்பட்ட விபத்தில் வேனில் பயணித்த இரண்டு ஆண்கள், ஒரு பெண் மற்றும் ஒரு குழந்தை படுகாயமடைந்து, மாவ தகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் குழந்தை உயிரிழந்தது.

அடுத்து உடுகம பொலிஸ் பிரிவில் உடலமத்த பகுதியில், உடுகம திசையிலிருந்து உடலமத்த திசை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் எதிர் திசையில் வந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் செலுத்துனர் பலத்த காயமடைந்து உடுகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

கோனதெனி பகுதியை சேர்ந்த 15 வயதான பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்ததாக பேராதனை - கட்டுகஸ்தோட்டை வீதியில் கன்னொருவ பகுதியில் விபத்து சம்பவம் பதிவாகியுள்ளது.

கன்னொருவ பகுதியில் மோட்டார் வாகனம் ஒன்று வீதியை கடந்த பாதசாரி மீது மோதி ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த பாதசாரி பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

பேராதனை, கன்னொருவ பகுதியைச் சேர்ந்த 57 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மேலும் கொழும்பு - கண்டி பிரதான வீதியில் கிரில்லவல பகுதியில் மற்றுமொரு விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது பிரைமூர் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி நிறுத்தப்பட்டிருந்த அனர்த்த வாகனம் மீது மோதி, அருகிலுள்ள இரண்டு பாதசாரிகள் மீதும் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் இரண்டு பாதசாரிகளும் பலத்த காயமடைந்து கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்தார்.

ராகம, நெலிகம பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மற்றைய பாதசாரி மேலதிக சிகிச்சைக்காக ராகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்பத் மனம்பேரி தொடர்பில் அமைச்சர் வெளிப்படுத்திய முக்கிய தகவல்!

கொழும்பு, செப் .10

ஐஸ் போதைப்பொருள் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு கொள்கலன்களில் மூலப்பொருட்களை மறைத்துவைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட சம்பத் மனம்பேரி என்ற சந்தேகநபர் முன்னாள் பொலிஸ் புலனாய்வு அதிகாரி என அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சம்பத் மனம்பேரி என்ற சந்தேகநபர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கிலும் சந்தேகநபராக அடையாளம் காணப்பட்டுள்ளார் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார்.

தற்போது காவலில் உள்ள மற்றும் கைது செய்யத் தேடப்படும் இரண்டு நபர்களும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் தொடர்புடையவர்கள். இவர்கள் இருவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பொதுஜன பெரமுன அந்த குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டதால் தான் அவர்களை கட்சியிலிருந்து நீக்கியுள்ளனர். எவ்வாறிருப்பினும் அது மாத்திரம் போதாது.

அவரை பொலிஸில் ஒப்படைத்து சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பொதுஜன பெரமுன ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சம்பத் மனம்பேரி என்ற குறித்த சந்தேகநபர் நீண்ட காலம் பொலிஸ் கான்ஸ்டபிளாகவும், பின்னர் குறுகிய காலம் புலனாய்வுத்துறை அதிகாரியாகவும் செயற்பட்டிருக்கின்றார்.

பொலிஸார் அவரை தேடும் பணிகளை தீவிரமாக முன்னெடுத்துள்ளனர். விரைவில் அவர் கைது செய்யப்படுவார்.

அவர்கள் வழங்கும் வாக்குமூலம், சாட்சியங்களுக்கமைய இவற்றுடன் தொடர்புடைய மேலும் பலர் கைது செய்யப்படுவர். சந்தேகநபரது குடும்பத்துடன் தங்காலை, மித்தெனிய மற்றும் அம்பாந்தோட்டை போன்ற பகுதிகளில் உள்ள அரசியல்வாதிகள் நெருக்கமாக தொடர்பு வைத்துள்ளனர்.

எனவே நாமல் ராஜபக்ஷ உட்பட பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் செய்யக்கூடிய மிகப்பெரிய விடயம், சம்பத் மனாம்பேரியை பொலிஸாரிடம் ஒப்படைப்பதாகும் என்றார்.

இதேவேளை சர்ச்சைக்குரிய இரு கொள்கலன்கள் எவ்வாறு விடுவிக்கப்பட்டன என்பது தொடர்பில் சுங்க திணைக்களமும் குற்றப்புலனாய்வு திணைக்களமும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளன.

திட்டமிட்டு அவை விடுவிக்கப்பட்டிருந்தால் அதனுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட்) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்திய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# சர்வதேசத்தை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை

"ஆயுதப் போராட்டம் முடிவடைந்து பதினாறு ஆண்டுகளான போதும், எந்த உள்ளகப் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளும் இன்னமும் உருவாக்கப்படவில்லை. இந்தச் சூழலில், பாதிக்கப்பட்டவர்கள் சர்வதேச ஈடுபாட்டை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள அறிக்கை ஏமாற்றமளிக்கின்றது." - இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது அமர்வில் வெளியிட்ட அறிக்கைக்குப் பதில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பல முக்கிய கரிசனைகளுக்கு அரசு இன்னும் பதிலளிக்கவில்லை என்பதில் எமது ஆழ்ந்த ஏமாற்றத்தை இங்கு பதிவு செய்கின்றோம்.

இந்த அரசாங்கம் பதவியேற்றபோது பல வாக்குறுதிகளை வழங்கியது. எனினும், ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்று ஒரு முழு ஆண்டு ஆன பின்னும், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் முதல்படி கூட இன்னும் எடுக்கப்படவில்லை.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை வலுப்படுத்தல் நாட்டின் அபிவிருத்திக்கு அவசியம் எனக் கூறினாலும், எளிதில் செய்யக்கூடியவை கூட முயற்சிகள்கூட இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. பல உறுதிமொழிகள் வழங்கப்பட்ட போதிலும், பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் நீக்கப்படவில்லை. அந்தச் சட்டத்துக்கு மாற்றாக எந்தப் புதிய சட்டமும் கொண்டு வரமாட்டோம் என்ற உறுதியான நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்திருந்த போதிலும், தற்போது வெளிவிவகார அமைச்சர் பயங்கரவாதத்துக்கு எதிரான புதிய சட்டம் கொண்டு வரப்படும் என அறிவித்துள்ளார் என்பது வருத்தத்துக்குரியது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கம் செய்யப்படும் வரை அதன் பயன்பாட்டில் தற்காலிகமான தடை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளும், உறுதிமொழிகளும் இருந்தும், அது தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதேபோன்று, நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நீக்கம் செய்ய எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

வெளிநாட்டு நடவடிக்கைகள் தேசிய செயல்முறைகளில் பிளவுகளையும் அபாயத்தையும் ஏற்படுத்தும் என வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளதும், இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதும் மிகவும் கண்டனத்துக்குரியது.

ஆயுதப் போராட்டம் முடிவடைந்து பதினாறு ஆண்டுகளான போதும், எந்த உள்ளகப் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளும் இன்னமும் உருவாக்கப்படவில்லை. இந்தச் சூழலில், பாதிக்கப்பட்டவர்கள் சர்வதேச ஈடுபாட்டை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை.

யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில் 240 மனித எலும்புக்கூடுகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை சட்டத்துக்குப் புறம்பான கொலைகளாக இருப்பினும் இங்கு கிடைக்கப்பட்ட சான்றுகள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் எதுவும் குறிப்பிடவில்லை. இந்த உயிரிழப்புகளை அடையாளம் காண உள்ளூர் நிபுணத்துவம் இல்லாதது நிதர்சனமான உண்மை. இருந்தும், அரசாங்கம் சர்வதேச உதவியை இன்னமும் கோரவில்லை.

மனிதப் புதைகுழிகள், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் போன்ற பல விடயங்களிலும் இதே நிலை தொடர்கின்றது.

அதிகாரப் பகிர்வு குறித்து மீண்டும் வலியுறுத்தியதற்கும், தமிழ் சமூகத்தின் அவாவான சமத்துவம், நீதி, மாண்பு, சமாதானம் ஆகியவற்றுக்காக ஆதரவு வழங்கியதற்கும் இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்தியா, மாகாண சபைத் தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்றும், அதிகாரப் பகிர்வு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. மாறாக, இலங்கை அரசாங்கம் தன் எழுத்திலான பதிலில், எல்லை நிர்ணயிப்பு செயல்முறை முடிந்த பிறகு மட்டுமே மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்ற நிலை எடுத்துள்ளது.

இது பல ஆண்டுகள் தேர்தலைத் தள்ளிவைக்கும் எண்ணப்பாட்டைக் காட்டுகின்றது. வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு அரசாங்கம் அளித்த வாக்குறுதியை மீறி, அவர்களின் வாக்குரிமையைத் தொடர்ந்து உதாசீனப்படுதலைக் காட்டி நிற்கின்றது.

எமது நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் முன்வைத்த தனிநபர் சட்டமூலத்தை அரசாங்கம் உடனடியாக ஒப்புதல் வழங்கி, மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்." - என்றுள்ளது. (ஐ)

# மன்னார் வைத்தியசாலை மேம்பாட்டுக்காக இந்தியா 600 மில்லியன் ரூபாய் மானிய உதவி!



மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் மேம்பாட்டுக்கான 600 மில்லியன் ரூபாய் மானிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியாவும் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளன.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவை நிர்மாணித்தல் மற்றும் அந்தப் பிரிவுக்கு மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் என்பவற்றுக்காக, 600 மில்லியன் ரூபாய் மானிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், இந்தியாவும் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் நேற்று இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா மற்றும் இலங்கை சுகாதார அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க ஆகியோர் கொழும்பில் வைத்து கையெழுத்திட்டுள்ளனர்.

இந்தத் திட்டம், மருத்துவமனைக்கு இரண்டு மாடி விபத்து மற்றும் அவசர பிரிவின் சிவில் கட்டுமானத்தையும், அலகுக்குத் தேவையான அனைத்து மருத்துவ உபகரணங்களைக்கொள்வனவு செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த திட்டம், இலங்கையின் சுகாதாரத்துறையில் இந்தியாவின் ஒத்துழைப்பு பட்டியலை நீடித்துள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகரம் தெரிவித்துள்ளது .(ஐ)

# வாகன விபத்தில் சிறுவன் மரணம்!

கொழும்பு, செப். 10

வான் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் 11 வயதுடைய சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் மாவத்தகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி -குருநாகல் பிரதான வீதியில் 6 ஆவது மைல் கல்லுக்கருகில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

கண்டி நோக்கிப் பயணித்த வான் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் வானில் பயணித்த சாரதி உட்பட இரு ஆண்கள், இரு பெண்கள், ஒரு சிறுவன் என ஐந்து பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், படுகாயமடைந்த சிறுவன் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

11 வயதுடைய மாவத்தகம பகுதியைச் சேர்ந்த சிறுவனே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, மாவத்தகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நால்வரும் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் மாவத்தகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நேபாளத்திலிருந்து வெளியேற்றப்படவுள்ள 73 இலங்கை யாத்ரீகர்கள்!

இந்தியாவில் இருந்து சாலை வழியாக லும்பினிக்கு பயணித்த 73 இலங்கை யாத்ரீகர்கள் கொண்ட குழு நேபாளத்திலிருந்து வெளியேற்றப்பட உள்ளது. நேபாளத்தை விட்டு வெளியேறத் தயாராகும் வகையில் யாத்ரீகர்கள் இந்தியா-நேபாள எல்லையில் இருப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேபாள குடிவரவு அதிகாரிகளின் அமைப்பு செயல்படாததால், நடைமுறைகளை விரைவுபடுத்துவதற்காக இலங்கை தூதரக அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் அவர்களுடன் தொடர்பில் உள்ளனர். அங்குள்ள தூதரகத்தின் தகவலின்படி, நேபாள இராணுவம் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளது, மேலும் மக்கள் வீட்டிலேயே இருக்குமாறு ஏற்கனவே ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. காத்மாண்டுவில் உள்ள இலங்கை தூதரகத்தின் தகவலின்படி, நேபாளத்தில் வசிக்கும் இலங்கையர்களின் எண்ணிக்கை 102 என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. நேபாளத்தில் வசிக்கும் அனைத்து இலங்கையர்களும் பாதுகாப்பாக இருப்பதாகவும், அவர்களுக்கு எந்த அசாம்பாவிதங்களும் நடந்ததாக எந்த தகவலும் இல்லை என்றும் வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியது.

# துப்பாக்கியுடன் இருவர் கைது!

கொழும்பு , கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் துப்பாக்கியுடன் இருவர், பொலிஸாரால் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ரி - 56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 10 கிலோ குஷ் போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜை ஒருவர் இன்று கைது!

கொழும்பு, செப். 10

சுமார் 10 கிலோகிராமுக்கும் அதிகளவான குஷ் போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் இன்று புதன்கிழமை பயணிகள் வருகை முனையத்தின் ஊடக வெளியேற முற்பட்ட சந்தேகத்துக்கிடமான பயணி ஒருவரைச் சுங்கப் பிரிவு அதிகாரிகள் தடுத்து நிறுத்தி சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது அந்த நபரின் பயணப் பொதியினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 10 கிலோ 750 கிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் இருந்து ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தினுடாகச் சந்தேகநபர் நாட்டை வந்தடைந்துள்ளார்.

கைதான நபர் 24 வயதுடைய இந்தியப் பிரஜை என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இதேவேளை, சம்பவம் தொடர்பில் விமான நிலையப் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

# அதிமுகவுக்கு அறுவை சிகிச்சை செய்யும் பாஜக: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திட்டம்





பாஜகவின் அறுவை சிகிச்சையால் அதிமுக ஐ.சி.யூ.வில் சேர்க்கப்படும் நிலையில் உள்ளதாக உதயநிதி ஸ்டாலின் விமர்சனம் செய்தார். தமிழகம் முழுவதும் தொகுதிவாரியாக திமுக நிர்வாகிகளைச் சந்திக்க துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திட்டமிட்டுள்ளார். அதன் அடிப்படையில் செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகரில் நடைபெறும் திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இந்தியாவில் அதிகமாக தமிழ்நாட்டில் உயர்கல்வியில் 75மூ பேர் சேர்ந்துள்ளனர். 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு கடந்த 2 ஆண்டுகளாக கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

விடுபட்ட தகுதிவாய்ந்த அனைவருக்கும் விரைவில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும். விடுபட்ட தகுதிவாய்ந்த மகளிருக்கு ஒன்று அல்லது 2 மாதத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும். மகளிர் விடியல் பேருந்தில் இதுவரை 780 கோடி முறை பெண்கள் பயணம் செய்துள்ளனர். காலை உணவு திட்டத்தால் தமிழ்நாட்டில் 22 லட்சம் குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர். காலை உணவுடன் தாமான கல்வியை வழங்கி வருவதாக பெற்றோர்கள் தமிழ்நாடு அரசை பாராட்டுகின்றனர். பல்வேறு மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக நமது திராவிட மாடல் அரசு திகழ்கிறது.

இரண்டு திமுக தொண்டர்கள் சந்தித்தால் கட்சிப் பணி குறித்து பேசுவார்கள். அதே இரு அதிமுக தொண்டர்கள் சந்தித்தால் இருவரும் பேசாமல், எந்த கோஷ்டியை சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என அவர்களுக்குள் சந்தேகம் இருக்கும். உலகத்திலேயே தங்கள் கட்சி சிக்கல்களுக்காக இன்னொரு கட்சித்தலைவரை பஞ்சாயத்து செய்ய அழைக்கும் அதிமுகவினரை போன்ற நிலைமை வேறு யாருக்கும் வரக்கூடாது. எடப்பாடி சுற்றுப்பயணத்தின் போது ஆம்புலன்ஸ் வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. நடுரோட்டில் கூட்டம் நடத்தும்போது ஆம்புலன்ஸ் வர தான் செய்யும். ஆம்புலன்சிற்கு வழி விடுபவர்கள் தான் உண்மையான தலைவர்கள்.

ஐசியூவில் அ.தி.மு.க இருக்கும் என்று தான் பேசினேன் இபிஎஸ் ஐசியூவில் இருப்பார் என பேசவில்லை இ.பி.எஸ் 100 ஆண்டுகள் மன நலத்தோடு வாழ வேண்டும். அதிமுகவை வழிநடத்த இபிஎஸ்-க்கு மட்டும்தான் தகுதி உள்ளது. அதிமுகவின் நிரந்தர பொதுச்செயலாளராக இபிஎஸ்தான் தொடர வேண்டும். அதுதான் தமிழ்நாட்டு மக்களுக்கு நீங்கள் செய்யும் ஒரே நல்ல காரியம். அப்போதுதான் எங்கள் வேலையும் சுலபமாக இருக்கும். அதிமுகவினர் இதை ஒத்துக் கொள்வார்களா என தெரியாது, ஆனால் நான் முன்மொழிகிறேன், நீங்கள்தான் நிரந்தர பொதுச்செயலாளர். அதிமுகவை பாஜகவிடம் இருந்து மீட்க வேண்டும், அதிமுகவை பாஜக கூறுபோட்டு வருகிறது.

பழனிசாமியின் முதல் சுற்றுப்பயணத்தில் அதிமுகவினர் பாதிபேரை காணவில்லை. 2வது சுற்றுப்பயணத்தில் பேருந்தில் எடப்பாடி பழனிசாமி மட்டுமே வருவார். செங்கோட்டையன் கோயிலுக்கு செல்வதாக அமித் ஷாவை சந்தித்து வந்துள்ளார். பாஜகவின் அறுவை சிகிச்சையால் அதிமுக ஐ.சி.யூ.வில் சேர்க்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறினார். (ஐ)



## நயன்தாரா ஆவணப் படத்துக்கு எதிராக ஏபி இண்டர்நேஷனல் நிறுவனம் வழக்கு!

நயன்தாரா ஆவணப் படத்தில் அனுமதியின்றி சந்திரமுகி படக் காட்சிகளை பயன்படுத்தத் தடை கோரி ஏபி இண்டர்நேஷனல் நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. இது தொடர்பாக பதில் மனுத் தாக்கல் செய்ய ஆவணப் படத் தயாரிப்பு நிறுவனமான டார்க் ஸ்டூடியோ நிறுவனத்துக்கு அக்டோபர் 6ம் தேதி வரை அவகாசம் வழுங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டார்க் ஸ்டூடியோ நிறுவனம் நடிகை நயன்தாராவின் ஆவணப் படத்தை தயாரித்தது. இந்த ஆவணப்படம் கடந்த 2024ம் ஆண்டு நவம்பர் மாதம் ஓடிடி தளத்தில் வெளியிடப்பட்டது. இதில் தனது வொண்டர்பார் தயாரிப்பு நிறுவனத்திடம் அனுமத்தி பெறாமல் ‘நானும் ரவுடி தான்’ திரைப்படத்தின் காட்சிகளை பயன்படுத்தியதாக கூறி ரூ.1 கோடி இழப்பீடு கேட்டு நடிகர் தனுஷ் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் சிவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பான விசாரணை நிலுவையில் உள்ள நிலையில் நயன்தாராவின் ஆவணப் படத்தில் அனுமதி பெறாமல் சந்திரமுகி திரைப்படத்தின் காட்சிகளை பயன்படுத்தியதாக கூறி படத்தின் பதிப்புரிமையை பெற்றுள்ள ஏபி இண்டர்நேஷனல் நிறுவனம் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில், நயன்தாரா ஆவணப் படத்தில் சந்திரமுகி திரைப்படத்தின் காட்சிகளை நீக்கக்கோரியும், ரூ.5கோடி இழப்பீடு கோரியும் நோட்டீஸ் அனுப்பப்பட்ட நிலையில் இன்னும் அவற்றை பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆவணப் படத்தில் சந்திரமுகி திரைப்படத்தின் காட்சிகளை நீக்கக்கோரியும், ஆவணப் படத்தின் மூல ஈட்டிய லாபத்தின் கணக்கை சமர்ப்பிக்க உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த வழக்கு நீதிபதி செந்தில்குமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது, இந்த பிரச்சனை தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக டார்க் ஸ்டூடியோ நிறுவனம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக எந்த தகவலும் இல்லை எனவும் வழக்கில் பதில் மனு தாக்கல் செய்யவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து இந்த வழக்கில் பதில் மனு தாக்கல் செய்ய டார்க் ஸ்டூடியோ நிறுவனத்துக்கு அக்டோபர் 6ம் தேதி வரை அவகாசம் வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## பாமக பெயர், சின்னம் தொடர்பாக அக்கட்சி நிறுவனர் ராமதாஸ் தரப்பில் கேவியட் மனுக்கள் தாக்கல்



பாமக பெயர், சின்னம் தொடர்பாக அக்கட்சி நிறுவனர் ராமதாஸ் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உரிமையியல் நீதிமன்றத்தில் கேவியட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவில், கட்சி, சின்னத்துக்கு உரிமை கோரி வழக்கு தொடர்ந்தால் தங்கள் தரப்பை கேட்க வேண்டும். கட்சி, சின்னத்துக்கு அன்புமணி உரிமை கோரினால் தங்களை கேட்காமல் உத்தரவு பிறப்பிக்கக் கூடாது என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ராமதாஸ் நியமித்த பொதுச்செயலாளர் முரளி சங்கரின் மனுக்களை வழக்கறிஞர் கோபு தாக்கல் செய்தார்.”(ஐ)

## விபத்தில் மூளைச்சாவு அடைந்த இளைஞரின் உடல் உறுப்பு தானம்: அரசு சார்பில் மரியாதை



பெரியபாளையம் அருகே விபத்தில் மூளைச்சாவு அடைந்து உடல் உறுப்பு தானம் செய்த இளைஞரின் உடலுக்கு சார் ஆட்சியர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அடுத்த ஆரணியை சேர்ந்த பொறியாளர் தனுஷ்நாத் (26) புதுவாயல் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் ரயில் சக்கரம் தயாரிப்பு தொழிற்சாலை கட்டுமான பணிகளில் பணியாற்றி வந்தார். கடந்த 7ஆம் தேதி சுமார் 15அடி உயரத்தில் பணியில் இருந்த போது தவறி விழுந்ததில் பலத்த காயமடைந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் சென்னை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பலனின்றி மூளைச்சாவு அடைந்த நிலையில் அவரது உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டன. உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஆரணியில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த தனுஷ்நாத் உடலுக்கு பொன்னேரி சார் ஆட்சியர் ரவிக்குமார், பொன்னேரி வட்டாட்சியர் சோமசுந்தரம் ஆகியோர் மலர் வளையம் வைத்து அரசு சார்பில் மரியாதை செலுத்தினர்.

(ஐ)

# தாய்மை எனும் ஷ்ரோடிங்கரின் பூனை!



**நாராயணி சுப்ரமணியன்**



”ஒரு தொழிலாளி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான சமூக, மரபுசார் எதிர்பார்ப்புகளும், ஒரு தாய் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான சமூக மரபுசார் எதிர்பார்ப்புகளும் அதீதமாக முரண்படுகின்றன. இந்தச் சிக்கலை ஓர் ஆண் எதிர்கொள்வதில்லை. ஒரு நல்ல தந்தைக்கான எதிர்பார்ப்புகளும் நல்ல தொழிலாளிக்கான எதிர்பார்ப்புகளும் ஒன்றுபோலவே இருக்கின்றன” என்கிறார் ஆராய்ச்சியாளர் ஜூலி மெக்.

உண்மையிலேயே வேலையில் ஆர்வம் உள்ள ஒரு தொழிலாளி அர்ப்பணிப்பு உணர்வுடன் இருக்க வேண்டும், சம்பளம் தருபவரின் நலனுக்காகக் கொஞ்சம் சொந்த நலனைப்புறந்தள்ளவும் தயாராக இருக்க வேண்டும். வீட்டிலிருந்து அவனுக்கு எந்த இம்சைகளும் கூடியவரையில் வரக் கூடாது என்று சமூகம் எதிர்பார்க்கிறது. அதேநேரம் தாயாக இருக்கும் ஒரு பெண், வேறு எதைவிடவும் குழந்தைகளின் நலனை மட்டுமே கவனிக்க வேண்டும் என்றும் சமூகம் நினைக்கிறது. ஆக, ஒரு பெண் நல்ல தொழிலாளியாக இருக்கலாம் அல்லது நல்ல தாயாக இருக்கலாம், இரண்டும் ஒரே நேரத்தில் சாத்தியப்படாது. ஆண்களைப் பொறுத்தவரை ஒரு நல்ல தந்தை என்பவர் நன்றாக உழைத்து வேலை செய்து குடும்பத்தின் பொருளாதாரச் சுமையை எதிர்கொண்டால் போதும். ஆகவே ஒரு நல்ல தொழிலாளி நல்ல தந்தையாக மாறிவிடுகிறார். இந்த மனநிலையை சமூகம் மட்டுமல்ல, பொருளாதார அமைப்புகளும் பிரதிபலிக்கின்றன.

இந்தப் பின்னணியில்தான் தாய்மையடைந்த பெண் விஞ்ஞானிகளின் வாழ்க்கையை நாம் அணுக வேண்டியிருக்கிறது. பிற பணிகளைவிடவும் தீவிரமான அர்ப்பணிப்பு உணர்வைக் கோரக்கூடிய அறிவியல் துறையில், குழந்தை பெற்றுவிட்ட ஒரு பெண் எப்படிப் பொருந்துகிறார்? அவர் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?

ஸ்டெம் துறைகளில் இருப்பவர்களுக்குத் தாய்மை என்பது ஒரு பெரிய பயத்தை ஏற்படுத்துகிறது என்கிறார் இதுபற்றி விரிவாக ஆய்வு செய்துள்ள சாரா தெபாட். “என்னுடைய ஆய்வு மேற்பார்வையாளர் என்னிடம், ‘குடும்பமா ஆய்வுலகப் பயணமா, ஏதாவது ஒன்றைத் தெளிவாகத் தேர்ந்தெடுத்துக்கொள்’ என்றார். இதனாலேயே தாய்மை பற்றி யோசிப்பது பயமாக இருக்கிறது” என்று பலர் தெரிவித்ததாக அவர் பதிவு செய்கிறார். தீவிரமான ஆய்வையும் தாய்மைசார்ந்த பணிகளையும் ஒரு பெண் ஒரே நேரத்தில் சமாளிக்க முடியாது என்று சமூகம் திரும்பத் திரும்ப பெண்களுக்குச் சுட்டிக் காட்டுவதாகவும், அதனால் ஸ்டெம் துறைகளுக்குள் வரும் இளம்பெண்கள் பயப்படுவதாகவும் அவர் சொல்கிறார்.

சமூகரீதியாகவும் சரி, ஆய்வுத்துறைக்குள்ளும் சரி, தாய்மை அடைவது என்பது ஒரு பெண்ணின் வேலைக்குக் குறுக்கீடாகவே பெரும்பாலும் சுட்டப்படுகிறது. அந்த மனநிலை ஒரு பெரிய தடையாக மாறுகிறது என்று பெண் விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். பல திரைப்படங்களில் பெண் விஞ்ஞானிகள் குழந்தையற்றவர்களாகவே காட்டப்படுகிறார்கள். குழந்தைகளையும் பார்த்துக்கொண்டு அறிவியலிலும் சிறந்து விளங்கும் பெண்களை நாம் திரையில் அவ்வளவாகக் காண்பதில்லை. புசயஎவைல திரைப்படத்தில் வரும் சாண்ட்ரா புல்லக்கின் கதாபாத்திரம் தொடங்கி இதற்குப் பல உதாரணங்கள் உண்டு.

திரைப்படங்கள் மற்றும் வெகுஜன ஊடகங்களில் பெண் விஞ்ஞானிகளின் சித்தரிப்பானது தாய்மை குறித்த இந்தப் பொது மனநிலையை எப்படிப் பிரதிபலிக்கிறது என்று அழகாகக் குறிப்பிடுகிறார் கென்னா கேசல்பெரி. எக்ஸ்-ஃபைல்ஸ் என்கிற புகழ்பெற்ற தொடரின் முக்கியக் கதாபாத்திரமான டானா ஸ்கல்லியை உதாரணமாகக் காண்பிக்கிறார். 1990களில் இந்தத் தொடர் வெளிவந்தபோது ஸ்கல்லியின் கதாபாத்திரத்தைப் பார்த்த பல பெண்கள் உந்தப்பட்டு அறிவியல் துறைக்குள் வந்தார்கள். இது ஸ்கல்லி விளைவு (ளுஉரடடல நககநஉவ) என்றே அழைக்கப்பட்டது. தொடரின் ஒவ்வோர் அத்தியாயத்திலும் தனது அறிவுத்திறனாலும் அறிவியல் பார்வையாலும் பல சிக்கலான பிரச்னைகளைத் தீர்ப்பார் டானா ஸ்கல்லி. ஒரு கட்டத்தில் ஸ்கல்லிக்குக் குழந்தை பிறக்கும். “அது ஒரு நல்ல வாய்ப்பு. ஒரே நேரத்தில் வேலையையும் கவனித்துக்கொண்டு குழந்தை வளர்ப்பிலும் வெற்றியடையலாம் என்று காட்ட ஸ்கல்லியின் கதாபாத்திரத்தை ஒரு முன்னுதாரணமாக ஆக்கியிருக்கலாம். தாய்மை அடைந்த விஞ்ஞானிகளும் அதைத்தான் எதிர்பார்த்திருப்பார்கள். ஆனால் அந்தத் தொடரில் என்ன நடக்கிறது? குழந்தை பிறந்தபின் ஸ்கல்லி வேலையிலிருந்து விலகிவிடுவார். ஒருகட்டத்தில் திரும்ப வேலைக்கு வந்தே தீரவேண்டும் என்கிற கட்டாயம் வரும். வேறு வழியில்லாமல் தன் மகனைத் தத்து கொடுத்துவிட்டு மீண்டும் வேலை பார்க்கத் தொடங்குவார். இதனால் மனமுடைந்த அவரின் மகன் ஸ்கல்லியை வெறுத்து நிராகரிப்பான். ஸ்கல்லியால் இறுதிவரை தாய்மைக்குள் நுழைய முடியாமலேயே போகும். ஆனால், நிஜவாழ்க்கையில் இதுவா அதுவா என்று முடிவெடுக்கவேண்டிய கட்டாயம் எல்லா நேரத்திலும் இருக்காது. பெண்கள் அப்படித் தேர்வு செய்யவும் வேண்டியதில்லை, இரண்டையும் செய்யலாம்” என்கிறார் கென்னா.

பெற்றோராக ஆகிவிட்ட ஆண், பெண் இருபாலரிடமும் 2011ஆம் ஆண்டு ஒரு பரந்துபட்ட ஆய்வு நடத்தப்பட்டது. இதில் குழந்தை பிறப்புக்குப் பிறகு இரு தரப்பினரிடமும் ஆய்வுத் தரத்தில் எந்த மாறுபாடும் இல்லை என்று உறுதி செய்திருக்கிறார்கள். ஆனால் பிரச்னை ஆய்வுத்தரத்தில் இல்லாமல் வேறு வழிகளில் முளைத்தெழுகிறது என்று ஆய்வுக்குழுவினர் கண்டறிந்தனர். ஸ்டெம் துறையைச் சார்ந்த பலரிடம் நிலவும் மனநிலையை அவர்கள் முக்கியமாகச் சுட்டிக்காட்டுகிறார்கள். ஒரு பெண் விஞ்ஞானி தாயானால் அவளுக்கு அபராதம் விதிப்பதுபோலவும், தந்தையாக மாறிவிட்ட ஓர் ஆண் விஞ்ஞானியைக் கூடுதலாகக் கொண்டாடுவதும் இந்தத் துறைகளுக்குள் அதிகமாக நடக்கிறது. இதை ஆழவாநசாழழனிநயெடவல ரூ குயவாநசாழழன டிழரெள என்று அவர்கள் வர்ணிக்கிறார்கள்.

“எப்படியாக இருந்தாலும் நீ திருமணம் செய்துகொண்டு குழந்தை பெற்றபின் தீவிர ஆய்விலிருந்து விலகிவிடுவாய், இல்லையா?” என்கிற கிண்டலான கேள்வியை எதிர்கொள்ளாத பெண் விஞ்ஞானிகளே இருக்க முடியாது.

ஆய்வுத்திட்டங்களுக்கான பல நேர்முகத் தேர்வுகளில், “உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா? குழந்தை பெற்றுக்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறீர்களா?” என்கிற கேள்வி இப்போதும் நேரடியாகவோ மறைமுகமாகவோ கேட்கப்படுகிறது. “ஒரு தாயாக இருந்துகொண்டு இவ்வளவு கடினமான ஆய்வுத்தலைப்பைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்களே, எளிமையாக ஏதாவது செய்யலாமே” என்று தோழி ஒருவரிடம் ஒரு விஞ்ஞானி கேட்டாராம். ஸ்டெம் துறைகளில் இருக்கும் பல பெண்கள் இதுகுறித்த தங்களது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டிருக்கிறார்கள். இவற்றை முன்வைத்து எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளைப் படித்தால் அதிர்ச்சியாக இருக்கும். தாங்கள் கருவுற்றிருப்பதை அறிந்த மேற்பார்வையாளர்கள், முன்பு இருந்த ஆய்வுத்தலைப்பை மாற்றி தாங்களாகவே எளிய தலைப்பைத் தங்களுக்குத் தந்ததாகப் பல மாணவிகள் பதிவு செய்திருக்கிறார்கள். “குழந்தையெல்லாம் பிறந்தபின்னும்கூடச் சரியாகக் காலை ஒன்பது மணிக்கு ஆய்வுக்கூடத்துக்கு வந்துவிடுகிறார். இந்தப் பெண்ணுக்கு வீட்டில் வேலையே இருக்காதுபோல” என்று சக ஆய்வாளர்கள் தன்னைக் கேலி பேசியதாக இந்தியப் பெண் விஞ்ஞானி ஒருவர் வருத்ததுடன் பதிவு செய்திருக்கிறார். “எனக்கு நிறைய வேலை இருக்கும் என்று அவர்களாகவே நினைத்துக்கொள்கிறார்கள். புதிய ஆய்வுத்திட்டத்தின்போது என் பெயரை அவர்கள் பரிசீலிக்கவேயில்லை. கேட்டால், ‘உங்களுக்குக் குழந்தை பிறந்திருக்கிறது புது ஆய்வெல்லாம் எப்படி?’ என்று தயங்கித் தயங்கிச் சொல்கிறார்கள்” என்று வருத்தப்படுகிறார் இன்னொரு பெண் விஞ்ஞானி. இவற்றையெல்லாம்விடக் கொடூரமாக, “ஆய்வின் முக்கியமான கட்டத்தில் நீங்கள் கருவுற்றிருக்கிறீர்கள். நீங்கள் ஏன் கருக்கலைப்பு செய்யக்கூடாது?” என்று தனது ஆண் மேற்பார்வையாளர் கேட்டதாக அமெரிக்காவைச் சேர்ந்த ஓர் ஆய்வு மாணவி கூறுகிறார்!

(7ஆம் பக்கம் பார்க்..)





# நேபாளத்தில் பாதுகாப்புக்கான பொறுப்பை ஏற்ற ராணுவம்: போராட்டத்தை கைவிட தலைமை தளபதி கோரிக்கை

நேபாளத்தில் நாட்டின் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கை பராமரிக்க ராணுவம் ஆட்சியை கைப்பற்றி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. நேபாளத்தில் சமூக ஊடகங்களுக்கு தடை விதித்ததால் நாடு முழுவதும் பெரும் கலவரம் ஏற்பட்டது. போராட்டத்தை ஒடுக்குவதற்காக காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 19 இளைஞர்கள் கொல்லப்பட்ட நிலையில், அரசுக்கு எதிரான போராட்டம் கலவரமாக வெடித்தது. இதையடுத்து, இளைஞர்களின் போராட்டத்தை கட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில், சமூக ஊடக செயலிகளுக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவை நேபாள அரசு நீக்கியது.

மேலும், இளைஞர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டுக்கு பொறுப்பேற்று உள்துறை அமைச்சரும், அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து வேளாண் அமைச்சரும் தங்களின் பதவிகளை ராஜினாமா செய்தனர். இந்த போராட்டம் கலவரமாக மாறிய நிலையில், காத்மண்டுவில் உள்ள நேபாள கம்யூனிஸ்ட் கட்சி-ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் (சிபிஎம்-யுஎம்எல்) மற்றும் நேபாள காங்கிரஸ் கட்சிகளின் அலுவலகங்கள் சூறையாடப்பட்டன. நாடாளுமன்றக் கட்டடம், அமைச்சரவைக் கட்டடங்கள், அரசு அலுவலகங்கள், பிரதமரின் தனிப்பட்ட இல்லம், அமைச்சர்களின் இல்லங்கள், காவல் நிலையம், சாலையில் நின்ற வாகனங்களுக்கு போராட்டக்காரர்கள் தீ வைத்ததால் நிலைமை பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டை மீறியது.

இந்த நிலையில், பிரதமர் பதவியை ராஜினாமா செய்வதாக சர்மா ஒலி அறிவித்துள்ளார். தொடர்ந்து, பிரதமரின் அதிகாரப்பூர்வ இல்லத்தில் இருந்த சர்மா ஒலி, அமைச்சர்களை ஹெலிகாப்டர்கள் மூலம் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றும் பணியில் ராணுவத்தினர் ஈடுபட்டனர். தொடர்ந்து இன்றும் கலவரம் நீடித்து வருவதால் நேபாளத்தில் பாதுகாப்புக்கான பொறுப்பை அந்நாட்டு ராணுவம் ஏற்றுள்ளது. இதற்கிடையே நேபாள ராணுவ தளபதி மக்களிடையே உரையாற்றினார். அதில், போராட்டத்தை கைவிட்டுவிட்டு பேச்சுவார்த்தைக்கு வரும்படி நேபாள ராணுவ தளபதி அழைப்பு விடுத்துள்ளார். கலவரத்தால் நாட்டின் பொது சொத்து சேதப்படுத்தப்படுவது கவலையளிக்கிறது என நேபாள ராணுவ தளபதி வேதனை தெரிவித்தார். நாட்டின் அமைதி, பாதுகாப்பு, தேசிய ஒற்றுமை, சமூக நல்லிணக்கம் திரும்ப வேண்டும். வன்முறை, கலவரத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்தார்.

பதற்றம் அதிகரித்துள்ள நேபாளத்தில் இந்தியர்கள் 700 பேர் காத்மாண்டு விமான நிலையத்தில் சிக்கித் தவித்து வருகின்றனர்.

நேபாளத்தில் பதற்றம் நிலவி வருவதால் இந்தியர்களுக்கு உதவி எண்களை இந்திய தூதரகம் அறிவித்துள்ளது. அவசர உதவிக்கு 977-9808602881, 9810326134 ஆகிய எண்களில் இந்தியர்கள் தொடர்பு கொள்ளலாம். காத்மாண்டுவில் உள்ள இந்திய தூதரகத்தை தொடர்பு கொள்ளலாம் என்று வெளியுறவுத்துறை அறிவித்தது. (ஐ)

## பிரான்சின் புதிய பிரதமராக ஜெபஸ்டியன் லெகுர்னு நியமனம்: அதிபர் இமானுவேல் மேக்ரான் உத்தரவு



பிரான்ஸ் நாட்டின் புதிய பிரதமராக செபஸ்டியன் லெகுர்னுவை அதிபர் இமானுவேல் மேக்ரான் நியமித்தார். பிரான்ஸ் நாட்டின் அதிபராக மேக்ரோன் பதவி வகிக்கிறார். இவர் கடந்த 2024 ஜுன் மாதம் பார்லியை கலைத்து விட்டு தேர்தல் நடத்த உத்தரவிட்டார். அதன்படி தேர்வு செய்யப்பட்ட பார்லியில், முதலில் கேப்ரியல் அட்டல் பிரதமராக பதவி வகித்தார். அவர் 2024 செப்டம்பரில் ராஜினாமா செய்த நிலையில், மைக்கேல் பார்னியர் பிரதமராக நியமிக்கப்பட்டார். அவர், நம்பிக்கை இல்லா தீர்மானத்தில் தோல்வி அடைந்த நிலையில், மூன்றாவது பிரதமராக ஃபிரான்சுவா பேரூ பதவியேற்றார்.

பார்னியாா பதவி விலகிய பின்னர் ஃபிரான்சுவா பேரூவை பிரதமராக மேக்ரான் நியமித்தார். இந்நிலையில், அரசின் கடன்களை எதிர்கொள்ள அவர் முன்மொழிந்த சிக்கனமான நிதிக் கொள்கைக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இதனால் நாடாளுமன்றத்தில் தனக்கான ஆதரவை நிரூபிக்கும் வகையில் நம்பிக்கை வாக்கெடுப்பை பேரூ நேற்று முன்தினம் மேற்கொண்டார். அப்போது அவருக்கு எதிராக 364 வாக்குகள் பதிவானதால் அவர் தலைமையிலான அரசு கவிழ்ந்தது. இதையடுத்து நாட்டின் தற்போதைய ராணுவ அமைச்சராக உள்ள செபஸ்டியன் லெகுர்னுவை, 39, புதிய பிரதமராக நியமித்து அதிபர் இமானுவேல் மேக்ரான் நேற்று உத்தரவிட்டார். இதன் வாயிலாக, பிரான்ஸ் நாட்டில் ஒரே ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட நான்காவது பிரதமராக லெகுர்னு திகழ்கிறார். (ஐ)

## தாய்லாந்து முன்னாள் பிரதமரை சிறையிலடைக்க உத்தரவு!!



ஜாமினில் வெளியே வந்த தாய்லாந்து முன்னாள் பிரதமர் தக்சின் சினவத்ராவை சிறையிலடைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஊழல் வழக்கில் ஓராண்டு சிறை தண்டனை முறையாக நிறைவேற்றப்படவில்லை என வழக்கு தொடரப்பட்டது. சிறை விதிமீறல் உறுதியானதால் மீண்டும் ஓராண்டு சிறை தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (ஐ)

## நேபாளத்தில் பிரதமரை தொடர்ந்து, குடியரசுத் தலைவரும் ராஜினாமா

நேபாளத்தில் பிரதமர் கே.பி. சர்மா ஒலியைத் தொடர்ந்து, குடியரசுத் தலைவர் ராம் சந்திரா பவுடலும் ராஜினாமா செய்தார். மாணவர்கள், இளைஞர்களின் போராட்டத்துக்கு பணிந்து பிரதமர், குடியரசுத் தலைவர் ஆகியோர் ராஜினாமா செய்தனர். (ஐ)



## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் மருதனார்மடம் பகுதியில் , வீதியின் மறுபக்கத்துக்குச் சைக்கிளைத் திருப்ப முற்பட்டவருடன் மோட்டார் சைக்கிளில் வந்தவர் மோதி, நிலைதடுமாறி எதிரே வந்த 2 மோட்டார் சைக்கிள்களுடன் மோதியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் ஒரு சைக்கிளும், 3 மோட்டார் சைக்கிள்களும் ஒன்றுடன் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளன. அவற்றில் பயணித்த அனைவரும் சிறு காயங்களுடன் தப்பியுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளைச் சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நிமலராஜன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்து பொதுமக்கள், வர்த்தகர்கள், சாரதிகள் ஆகியோருக்கு இந்த அறிக்கை விநியோகிக்கப்பட்டது.

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை வழக்கின் விசாரணை மற்றும் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் தொடர்பான தகவல்களை உள்ளடக்கியதாக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

## மருதமுனையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாறியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான 29 வயதுடைய அலாவுதீன் ரிஷாத் என்ற இளம் குடும்பஸ்தரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மூன்று பிள்ளைகளின் தந்தையான 47 வயதுடைய நபர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட விசேட தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மொரட்டுவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இன்று பிற்பகல் நீதிமன்றத்தில் அவர் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மொரட்டுவை மாநகர சபையின் வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை தனது அன்புக்குரியவர்களுக்கு வழங்கியதன் மூலம் அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் சமன் லால் பெர்னாண்டோ, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மலையக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நோக்கத்தில் மலையக மக்களின் விசேட குறைதீர் கொள்கை தேவையை அடிப்படையாகக் கொண்டு, எமது நல்லாட்சியின் போது கொண்டு வரப்பட்ட, 2018 ஆம் வருட 32 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் உருவாக்கபட்ட நிறுவனமே, மலையக அதிகார சபை ஆகும்.

ஒரே பணியைச் செய்யும் ஒன்றுக்கு மேற்பட்ட அரச நிறுவனங்களை மூடி விட, இன்றைய அரசு, பிரதமர் தலைமையில் அமைத்த குழு முடிவு செய்து, அது அமைச்சரவையின் ஒப்புதலையும் பெற்றுள்ளது.

இப்படி அடையாளம் காணப்பட்ட 33 அரச நிறுவனங்கள் மத்தியில், மலையக அதிகார சபையும் ஒன்றாகக் கணிக்கப்பட்டுள்ளது. இந்தச் சபையையும் மூடி விட்டு, அதன் பணிகளை ஒரு அமைச்சின் பிரிவு ஒன்றுக்கு வழங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு தவறான புரிதல் ஆகும்.

இந்நிலையில் நாம் எமது எதிர்ப்பை பல மட்டங்களில் வெளியிட்டு இருந்தோம். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இது தொடர்பில் நான் எனது ஆட்சேபனைக் கடிதத்தை அனுப்பி இருந்தேன்.

இந்தப் பின்னணியில் துறைசார் அமைச்சர், மலையக அதிகார சபையை மூடி விட மாட்டோம் எனக்குத் தனிப்பட்ட முறையில் உறுதி அளித்துள்ளார்.

இது தொடர்பில் ஒரு அமைச்சரவை குறிப்பு ஒன்றைச் சமர்பித்து முந்தைய அமைச்சரவை முடிவை, துறைசார் அமைச்சர் வாபஸ் வாங்க வேண்டும். இதை இந்த அமைச்சர் செய்வார் என நினைக்கின்றேன்.

இது எமக்குக் கிடைத்துள்ள ஆர்ப்பாட்டம் இல்லாத அமைதி வெற்றி ஆகும். அதிகாரபூர்வமான அமைச்சரவை முடிவு வரும் வரை நாம் அமைதியாக இந்த விடயத்தை அவதானிப்போம்." - என்றார்.

### புனரமைப்புப் பணிகளுக்காக

# கொழும்பு மத்திய பஸ் நிலையம் பத்து மாதங்களுக்கு மூடப்படும்!

கொழும்பு, செப். 10

கொழும்பில் உள்ள மத்திய பஸ் நிலையம், புனரமைப்புப் பணிகளுக்காக நாளை வியாழக்கிழமை முதல் 10 மாதங்களுக்கு மூடப்படும் என இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

இந்தப் புனரமைப்புப் பணிகள் நிறைவடையும் வரை, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் புறக்கோட்டை, போதிராஜ மாவத்தை, குணசிங்கபுர மற்றும் பஸ்தியன் மாவத்தை ஆகிய இடங்களில் இருந்து இயக்கப்படும் என இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பி.எச்.ஆர்.டி. சந்திரசிறி தெரிவித்துள்ளார். விமானப் படையினரால் இந்தப் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஒருங்கிணைந்த கால அட்டவணையின் கீழ் இயங்கும் நீண்ட தூரப் பஸ்கள் பஸ்தியன் மாவத்தை பஸ் டிப்போவில் இருந்தும், ஏனைய குறுகிய தூர பஸ்கள் போதிராஜ மாவத்தையில் இருந்தும் இயக்கப்படும் எனவும் சந்திரசிறி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் தூய்மையான இலங்கை வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வாறு பஸ் தரிப்பிடம் மறுசீரமைக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் புனரமைப்புத் திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்காக 'சுத்தமான இலங்கை' திட்டத்தின் கீழ் சுமார் 540 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், இது ஒரு வருடத்துக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் இலங்கை போக்குவரத்துச் சபை மேலும் தெரிவித்துள்ளது.

# தாய்மை எனும்........

குழந்தை பெற்றுவிட்டால் ஒரு பெண்ணால் முழுமையாக ஆராய்ச்சியில் ஈடுபட முடியாது என்கிற பொது எண்ணம் ஒருபுறம் என்றால், தாயாகிவிட்ட பெண்களுக்கு எந்தவிதமான வசதிகளும் செய்து தராமலேயே அவர்களிடம் அர்ப்பணிப்பையும் ஆய்வுக்கட்டுரைகளையும் எதிர்பார்ப்பது இன்னொருபுறம். இதுவும் பிரச்னைக்குரியதுதான். "குடும்பமே இல்லை என்பதுபோல வேலை செய்ய வேண்டும், வேலையே இல்லை என்பதுபோல குழந்தையை வளர்க்க வேண்டும். இதுதான் தாயாக இருக்கும் பெண்கள்மீது உள்ள எதிர்பார்ப்பு. அறிவியல் பெண்களைப் பொறுத்தவரை தாய்மை என்பதே ஒரு ஷ்ரோடிங்கர் பூனைதான். இது ஒரு மிகப்பெரிய நகைமுரணாகவும் அவலமாகவும் தொடர்கிறது" என்கிறார் ஆராய்ச்சியாளர் ரெபெக்கா கலிசி. ஒரே நேரத்தில் உயிருள்ளதாகவும் உயிரற்றதாகவும் கருதப்படும் ஷ்ரோடிங்கர் பூனை என்கிற புகழ்பெற்ற அறிவியல் உருவகத்தை வைத்துத் தனது வருத்தத்தை இவர் சித்தரிக்கிறார்.

அமெரிக்காவில் நடந்த ஓர் ஆராய்ச்சியில், 43மூ ஸ்டெம் பெண்கள் குழந்தை பிறந்த பின்னர் முழுநேர வேலையை விட்டுவிட்டதாகத் தெரிய வந்திருக்கிறது. இவ்வாறு விலகியவர்களில் 71மூ பேர் ஆராய்ச்சியல்லாத பிற துறைகளுக்கு இடம்பெயர்ந்திருக்கிறார்கள். ஸ்டெம் துறையில் எதிர்பார்க்கப்படும் அர்ப்பணிப்பு உணர்வுக்கும் அங்கு தாய்மார்களுக்குக் கிடைக்கும் வசதிக்கும் உள்ள முரண்பாடே இதற்கு முக்கியக் காரணம். ஸ்டெம் துறையில் ஒரு பெண் தாயாகிவிட்டால் அவளுக்கு முன்னால் ஒரு மிகப்பெரிய தடைச்சுவர் எழும். அதை அவள் தகர்த்து எறிந்தால் மட்டுமே முன்னேற முடியும். இதை 'ஆயவநசயெட றயடட' என்கிறார்கள் சமூகவியல் வல்லுநர்கள். எல்லாத் துறையிலும் உழைக்கும் பெண்கள் இதை எதிர்கொள்ளக்கூடும் என்றாலும் ஆய்வுத்துறைகளில் இதன் தாக்கம் அதிகமாக இருக்கும்.

ஸ்டெம் துறைகளில் எப்படிப்பட்ட மாற்றங்கள் வேண்டும் என்பதைப் பல பெண் விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அந்தப் பட்டியலுக்குள் போவதற்கு முன்னால் ஒரு சிறு நிகழ்வைப் பார்க்கலாம். 'அறிவியல் மாநாடு அரங்குகளில் தாயாக இருக்கும் பெண் விஞ்ஞானிகளுக்கான வசதிகள்' என்கிற தலைப்பில் 46 பெண் விஞ்ஞானிகள் சேர்ந்து ஒரு முழுமையான ஆய்வுக்கட்டுரையைத் தயாரித்தார்கள். அதில் பல பரிந்துரைகளையும் சேர்த்திருந்தார்கள். ஆய்வுக்குழுவினரில் முதன்மையானவர் ரெபெக்கா கலிசி. இந்த ஆய்வுக்கட்டுரையை சஞ்சிகைகளில் பிரசுரிப்பதற்குத் தான் பட்ட பாடுகளை அவர் வேதனையுடன் எழுதியிருக்கிறார். பல சஞ்சிகைகள் இந்த ஆய்வுக்கட்டுரையை முழுமையாக நிராகரித்திருக்கின்றன. 'அட, இவ்வளவு ஏன்? ஒரு சஞ்சிகையை நடத்தும் ஒரு ஆண் பொறுப்பாசிரியர், ஏன் ஆய்வுக்குழுவினரில் ஆண்கள் இல்லை, இந்த வசதிகளைப் பற்றி ஆண் விஞ்ஞானிகளின் கருத்து என்ன என்று கேட்டார். ஆண் விஞ்ஞானிகளின் பார்வை இல்லாததால் ஆய்வுக்கட்டுரையை அவர் நிராகரித்தார்' என்று எழுதுகிறார். அதிகார மையங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் ஏன் முக்கியமானது என்பதை இது காட்டுகிறது.

உலகெங்கிலும் உள்ள பல பெண் விஞ்ஞானிகள், குழந்தை பிறந்ததற்குப் பிறகு பெண்களுக்குச் செய்து தரப்படவேண்டிய வசதிகளைப் பற்றிப் பல இடங்களில் அழுத்தம் திருத்தமாகப் பேசியிருக்கிறார்கள். சிலர் தங்களது பணியிடங்களிலேயே குரல் எழுப்பி அந்த வசதியைப் பெற்றிருக்கிறார்கள். புனேவில் உள்ள ஐஐளுநுசு ஆய்வுக்கழகத்தில் முதன்முதலாகக் குழந்தை பராமரிப்பு மையத்தை ஏற்படுத்திய மயூரிகா லாஹினி உட்பட இதற்குப் பல உதாரணங்களைச் சுட்டிக்காட்ட முடியும். மகப்பேறு காலம், குழந்தை வளர்ப்பு போன்ற வாழ்வின் முக்கியமான காலக்கட்டங்களில் பெண் விஞ்ஞானிகளின் சுமையைக் குறைக்க என்னென்ன செய்யலாம்?

குழந்தையைப் பார்த்துக்கொள்வதற்கான வசதிகள் : குழந்தைப் பராமரிப்பு சேவைகள் விலை உயர்ந்தவையாக இருக்கும் நாடுகளில் அதற்கான மானியம் அல்லது பணிபுரியும் தாய்மார்களுக்கான ஊதிய உயர்வு.

பணியிடத்தில் குழந்தை பராமரிப்பு மையங்கள்.

பெண் விஞ்ஞானிகளைப் பொறுத்தவரை அவர்களுடன் சேர்ந்து குழந்தையை வளர்க்கும் இணையர் (ஊழ-யசநவெ) மற்றும் நேரடியான உயரதிகாரி ஆகிய இருவரும் அவர்களது பிரச்னைகளைப் புரிந்துகொண்டு நடந்துகொள்ளுதல். வேலைநேரம், வேலை இடம் போன்றவற்றில் நெகிழ்தன்மை.

மகப்பேறு காலத்தில் ஆதரவு (ீசந-யசவரஅ யளளளைவயஉந)

பேறுகால விடுப்பு‰ விடுமுறை (ஆயவநசவைல டநயளந)

பணியிடங்களிலும் மாநாடுகளிலும் பாலூட்டும் அறைகள், அதில் போதுமான வசதிகள்.

பேறுகால விடுப்பு காரணமாகப் பணியிட ஒப்பந்தம் பாதிக்கப்படாது என்கிற வாக்குறுதி (ஊழவெசயஉவ ளுநஉரசவைல) இது குறுகிய கால ஆய்வுத்திட்டங்களில் இருக்கும் பெண்களுக்கு முக்கியமானது.

பொதுவாகவே பெண்களுக்கும் ஆண்களுக்குமான ஊதிய இடைவெளியைக் குறைப்பது.

பெண் விஞ்ஞானி கருவுற்றதை அறிந்தபின்னர் அவர்களுடன் நேரடியாகப் பேசிய பின்பே ஆய்வுத்திட்டம் பற்றிய முடிவுகளை எடுப்பது.

இதில் பேறுகால விடுப்பு பற்றி விரிவாகப் பேசவேண்டியிருக்கிறது. பேறுகால விடுப்பு பல பணியிடங்களில் வழங்கப்படுகிறது என்றாலும் ஸ்டெம் ஆய்வுத்திட்டங்களைப் பொறுத்தவரை பல குழப்பங்கள் நிலவுகின்றன. சம்பந்தப்பட்ட பெண் விஞ்ஞானி விடுப்பில் இருப்பார், அவர் இல்லாமலேயே ஆய்வு ஒரு தளத்துக்குச் சென்றிருக்கும். அந்தச் சூழலில் அவர் மீண்டும் வேலைக்கு வரும்போது ஆய்வுக்கட்டுரையில் அவர் பெயரைச் சேர்க்கலாமா இல்லையா என்பதுதொடங்கி அவர் பல பாரபட்சங்களை சந்திக்க வேண்டியிருக்கும். ஒரு வருடத்துக்கு எத்தனை ஆய்வுக்கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள் என்பதை வைத்து ஒருவரது வளர்ச்சி மதிப்பிடப்படும் சூழலில் இது முக்கியமானது.

'அடுத்தடுத்து முன்னேறவில்லை என்றால் ஆய்வுக்குழுவிலிருந்து விலக்கப்படுவீர்கள்' என்கிற கட்டாயம் இருந்தால் பெண்கள் பேறுகால விடுமுறையை எடுக்கவே தயங்குவார்கள். இதில் இருக்கும் ஒரு நுணுக்கமான பிரச்னையை முன்வைக்கிறார் பத்திரிகையாளர் திவ்யா காந்தி. "பேறுகால விடுப்பு வேண்டாம் என்று ஆய்வுக்கூடங்கள் நேரடியாகச் சொல்வதில்லை. ஆனால் ஒரு பெண் விஞ்ஞானி பேறுகால விடுப்பு எடுத்துவிட்டால் அடுத்தடுத்த ஆய்வுத்திட்டங்களில் அவரது பெயரைச் சேர்க்க மாட்டார்கள். இது பல இடங்களில் நடக்கிறது" என்கிறார். ஒருவகையில் இதுவும் நாம் ஆழவாநசாழழன ீநயெடவல என்ற வகைமைக்குள்தான் வரும்.

"பொதுவாக பெண்களுக்கான துறைகள் என்று கருதப்படும் கல்விப்புலத்திலோ மருத்துவ சேவைகள் (செவிலியர் போன்ற பணிகள்) சார்ந்த துறைகளிலோ இது பெரும்பாலும் நிகழ்வதில்லை. அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளில்தான் அது அதிகமாக நடக்கிறது" என்கிறார் கனடாவைச் சேர்ந்த விஞ்ஞானி இவோனா ஹெடிக். இதுபோன்ற துறைகளில், பேறுகால விடுப்பு முடிந்து வேலைக்குத் திரும்பும் பெண்களுக்குக் குறைவான சம்பளமே தரப்படுகிறது.

அது மட்டுமல்ல, பேறுகால விடுப்பு என்கிற இதே அம்சத்தை வைத்து குயவாநசாழழன டிழரெள என்பதையும் புரிந்துகொள்ளலாம். அமெரிக்காவில் 2011ஆம் ஆண்டு நடந்த ஓர் ஆய்வில், குழந்தையைப் பார்த்துக்கொள்வதற்காக விடுப்பு எடுக்கும் ஆண்கள்மீது உயரதிகாரிகளுக்கு ஒரு நல்ல மதிப்பு வருவது தெரிய வந்திருக்கிறது. ஆக, பேறுகால விடுப்பு என்பது நடைமுறையில் இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்வதில் பல மனத்தடைகளைச் சமூகமும் பணியிடங்களும் உருவாக்குகின்றன. இன்னொருபுறம், பேறுகால விடுப்பின்போது எவ்வளவு சம்பளம் தரப்பட வேண்டும், எத்தனை வாரங்கள் அல்லது மாதங்கள் பேறுகால விடுப்பு என்பதிலும் ஸ்டெம் துறைகளுக்குள் குழப்பம் நிலவுகிறது.

பணியிடங்களின் பங்களிப்போடு, குழந்தை வளர்ப்பில் ஈடுபடும் பெண்களுக்குச் சமூகமும் குடும்பமும் ஆதரவாக இருக்க வேண்டியது அவசியம். சமீபத்திய ஓர் அறிவியல் மாநாட்டில் பெண் விஞ்ஞானிகளுக்கான சிறப்பு நிகழ்வில் பேசிய பல ஆளுமைகளும் இதையே வலியுறுத்தினார்கள். பெண்கள் வீட்டு வேலை தொடங்கி அலுவலக வேலை வரை இருக்கும் எல்லாச் சிறு பொறுப்புகளையும் தாங்களே செய்து கஷ்டப்படவேண்டியதில்லை எனவும், அவர்களது குடும்பத்தினரும் சமூகமும் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

தாய்மை ஒரு பெரிய பொறுப்பு. அந்தப் பொறுப்பை எதிர்கொள்ளும் பெண்ணுக்கான ஆதரவையும் உதவியையும் சமுகம் நிச்சயமாக செய்ய வேண்டும். ஸ்டெம் துறைகளில் பெண்கள் நீடித்து நின்று தாங்கள் எட்ட விரும்பிய உயரங்களை எட்ட வேண்டுமானால் அதற்குப் பேறுகாலங்களிலும் சரி, குழந்தை வளர்ப்பின்போதும் சரி, அவர்களுக்கான வசதிகள் செய்து தரப்பட வேண்டும். சட்டங்கள் இயற்றுவது தொடங்கி மனப்போக்கை மாற்றுவது முதல் பல தளங்களில் இதற்கான முன்னெடுப்புகள் வேண்டும். அந்தப் பாதுகாப்பான சூழல் இருந்தால் மட்டுமே தாய்மையின் ஷ்ரோடிங்கர் பூனையைச் சமாளிக்க முடியும்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.09.2025 வெளியிடப்பெற்றது.